RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s22279

OPEN ACCESS

# சல்மாவின் புதினங்களில் பெண் விடுதலை வேட்கையும், பெண் உரிமையும்

இ. முன்னி, [அ, *], செ. ஹேமலதா [அ]

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா

# Women's Emancipation and Women's Rights in Salma's Novels

E. Munni [a, *], S. HemaLatha [a]

[a] PG Tamil and Research Department, Chellammal Women's College, Guindy, Chennai-32, Tamil Nadu, India

* Corresponding Author:
aliashifa04@gmail.com

Received: 13-09-2022
Revised: 18-11-2022
Accepted: 21-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

Salma, a female author, has written two novels namely Irandam Jamangalin Kathai and Manamiyangal. The characters in these novels highlight the woes, sorrows and stress of women. It also manifests women's rights and emancipation and also about women breaking their oppression. It was Salma who talks about the life of Muslim women in Tamil literature. The novel Irandam Jamangalin Kathai story of Salma's second is about the life of women who are locked up in the house, their sorrows and horrors. The second novel Manamiyangal which was written 10 years later examines the lives of the women. It indirectly points out the relationship between women slavery, religion and imperialism. The women characters in the novels lose their rights and fighting for it. Their inner need, search and their quest for liberation are clearly explained by Salma in these novels. The anxieties of Pirthavs, Wahitha and many other women characters are clearly stated in these novels. Their requirement, solution and decision is taken by them and Salma's novels accurately reveal that theirl liberation decision was right in every way. The purpose of this novels is that Muslim women should come forward to get their rights. Salma's novels boldly suggest that the story of women's emancipation in these novels is a model for other women who are suffering for their rights. Salma says that Nabigal Nayagam's era is completely different from today's Islamic age and she insists the readers to change accordingly and to live in the present.

**Keywords:** Salma, Nabigal Nayagam, Women's Emancipation, Muslim women

## முன்னுரை

பெண் படைப்பாளிகளின் அடிப்படை அவர்கள் வாழுகின்ற வாழ நேர்ந்து விடுகின்ற வாழ்வியலின் வேர்களிலிருந்து கிளைத்து வருகின்றது. மனித வரலாறும் ஆதிக்கமும் பிரிக்க முடியாத ஒன்றாக இருக்கின்றன. மனித சமுதாயம் ஒருவருக்குக் கீழ் ஒருவர் என்ற படிநிலையை வைத்து அதிகாரத்தை வளர்த்தெடுத்துள்ளது. காலங்களுக்கேற்ப அதிகாரம் தன்னை மீட்டெடுத்துக் கொள்கிறது. ஆதிக்கம் செலுத்துவது மட்டுமே மனித இனத்தின் ஆழ்மனது நோக்கமாக இருந்து வந்திருக்கிறது. கடந்த நூற்றாண்டில் மனிதர்களின் ஆதிக்கம். ஒடுக்குமுறை தவறானது என்ற கருத்தியல்கள் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளதால் ஆதிக்கம் / ஒடுக்குமுறை தன்னைத் தானே மீள்சூழற்சி செய்து கொண்டுள்ளது.

இங்கே அதிகாரம் கலாச்சாரமாக, ஒழுக்கமாக, குடும்பமாக, அன்பாக திரிபு பெற்றிருக்கிறது. இவற்றையெல்லாம் ஒருங்கிணைக்கும் சக்தியாக மதம் விளங்குகிறது. மதம் இவ்வுலக துன்பங்களுக்கு வேற்றுலகில் நீதி கேட்கிறது, அல்லது அளிக்கிறது. பாவங்களில் கடந்த ஜென்மங்களில் நியாயப்படுத்துகிறது. கடவுள் என்ற கருத்தியலை அனைவருக்கும் பொதுவென ஆக்கி சமத்துவமின்மையை சமூக ஏற்றதாழ்வுகளை மறைக்கிறது. வாட்டி வதைக்கும் துன்பங்களுக்கு மருந்தாய் நம்பிக்கையைப் போதிக்கிறது. சமுதாய சட்ட மீறல்களுக்கு தண்டகளை மொழிந்து அச்சுறுத்துகிறது. முந்தைய காலங்களில் மதமும் அரசியலும் வெவ்வேறாய் இருக்கவில்லை. இப்போதும் கூட ஆட்சியாளர்கள் மத்தியில் மத நம்பிக்கைகளுக்கு இருக்கும் செல்வாக்கைப் பார்க்கிறோம்.

ஆதிக்கம் முன்பு கூறியதைப் போல படிநிலைகளில் தான் இயங்குகிறது. இதில் முதலும் கடைசியுமாய் இருப்பவர்கள் பெண்கள். பெண்களே அதிக ஒடுக்குமுறைக்கு ஆளாகுகிறார்கள். அவர்கள் மேல் ஆதிக்கம் செலுத்தும் ஆண்கள். மதம் என்னும் மந்திரத்திற்குக் கட்டுப்பட்டு ஒடுக்குமுறையைத் திணிக்கிறார்கள். அதிகாரம் அல்லது ஆதிக்கம் என்ற மையப்புள்ளியிலிருந்து இரண்டு சக்கரங்கள் வரைவோமேயானால் அதில் உள் சக்கரத்தில் ஆண் - பெண் உறவுமுறையும் அதற்கு வெளியே மதத்திற்கும் மனிதனுக்குமான உறவுமுறையும் உள்ளது. இவ்விரு வட்டங்களும் அதிகாரம் என்னும் மையப்புள்ளியிலிருந்து ஆட்டுவிக்கப்படுகின்றன.

பெண்களுக்குப் பொருளாதாரப் பாதுகாப்பும், சமூக உரிமையும், அரசியல் அங்கீகாரமும் இல்லாத நிலையில், தங்களின் வாழ்க்கையினை அவர்களாகவே தீர்மானித்துக் கொள்ள இயலாமல் அவர்கள் துன்பப்படுகின்றனர்.

சல்மா தனது புதினங்களின் மூலம் இஸ்லாமியப் பெண்களின் உரிமையையும், விடுதலையையும் வலியுறுத்துகிறார். அப்பெண்களும் எல்லாவிதத்திலும் மனித இனம் தான். அவர்களுக்கும் எல்லாவித உணர்ச்சிகளும் உண்டு என்பதனை வெளிப்படுத்துகிறார்.

இப்புதினங்களில் வரும் கதாப்பாத்திரத்தின் தன்மையும், நடவடிக்கைகளும் பெண்களின் உரிமைகளையும், விடுதலையையும் வெளிப்படுத்துபவையாகவே உள்ளன. பெண் கதாப்பாத்திரங்களின் உரையாடல்களும் அதன் நியாயங்களும் அனைவரையும் சிந்திக்க வைக்கின்றன. அறிவியல் வளரும் பொழுது பெண்களின் உரிமையும், விடுதலை வேட்கையும் தானாகவே வெளிப்படும் என்பதே சல்மாவின் புதினங்களின் சாரம். இப்புதினங்களின் மூலம் சல்மா இஸ்லாமியப் பெண்களின் உரிமையையும், விடுதலையையும் எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பிர்தவ்ஸ் கதை மாந்தர் மூலம் பெண் விடுதலை வேட்கையும், பெண்ணுரிமையும்

இரண்டாம் ஜாமங்களின் கதையில் ஆமினாவிற்கு பிறந்தவள் பிர்தவ்ஸ். தனது தந்தையின் மரணத்திற்குப் பின் ராபியாவின் தந்தை கரீமின் கட்டுப்பாட்டில் வளர்ந்தாள். கரீமின் ஆண் ஆதிக்கத்தின் பிடியில் சிக்கித் தவித்த பிர்தவ்ஸ் அதன் பிடியிலிருந்து விடுபட எண்ணினாள்.

கரீம் பிர்தவ்சுக்குப் பணம் படைத்த அழகில்லாத பொருத்தமில்லாத மாப்பிள்ளையைத் திருமணம் செய்து வைத்தான். அதனை அவன் தனது மனைவி சொஹ்ராவிடம்,

“இங்கெ பாரு, மாப்பிள்ளை பாக்க லச்சணமா இல்லை தான். ஆனா, காசு பணம் நெறையா இருக்கு; அதுதான முக்கியம்? இப்ப ஊர் ஒலகத்துல நடக்குற கல்யாணம் எல்லாம் பொருத்தம் பாத்தா நடக்குது, சொல்லு? அதுவும் இல்லாம உங்க குடும்பம் இருக்க நெலைமைல இவங்க சம்பந்தத்துக்கு ஒப்புக்கிட்டு வந்ததே பெரிசு.” (Salma, 2018)

என்று கூறினான். பிர்தவ்ஸின் உரிமையை சிதைத்து கரீம் முடிவெடுக்கிறான். பிர்தவ்ஸ் கரீமின் முடிவை மறுக்கிறாள். தனது கணவன் யூசுப்போடு வாழ மாட்டேன் என்று கூறி கரீமையும்

பழி வாங்குகிறாள். பிர்தவ்ஸ் தனது உரிமையை இங்கு நிலைநாட்டி, பெண்களுக்கும் எல்லா உரிமையும் உண்டு என்பதை சல்மா பிர்தவ்ஸ் கதாபாத்திரம் மூலம் உரைக்கிறார்.

## பெரியாரின் சிந்தனை

பெண்களின் உரிமைக்காகவும், விடுதலைக்காகவும் தனது வாழ்நாளை அர்ப்பணித்த பெரியாரின் சிந்தனைகள் பெண்களின் வாழ்வியல் முறையை மாற்றியமைத்தது. எந்தப் பெண்ணும் சுதந்திரமாக அறம், உரிமையோடும் வாழ வேண்டும் என்றார். சல்மாவின் கருத்தைப் பெரியார் அன்றே நன்கு விவரித்துள்ளார்.

"விவாகம், விவாகரத்து, கல்வி, சொத்து, கற்பு, ஒழுக்கம், தொழில், அரசியல் முதலிய துறைகளில் ஆண்களுக்குள்ள சகல உரிமைகளும் பெண்களுக்கும் அளித்தல் வேண்டும். நமது பெண் மக்கள் வாழ்வதற்கு அவசியமான வகையில் உடைகளையும் நகைகளையும் சுருக்கிக் கொள்ள வேண்டும்" (Seaman Ilayaraja, 2006)

பெண்கள் திருமணத்திலும், விவாகரத்து செய்வதிலும் சம உரிமையைப் பெற்றிட வேண்டும் என்று பெரியார் கூறிய சிந்தனையை சல்மா பிர்தவ்ஸின் செயல்பாட்டின் மூலம் விளக்கச் சொல்லியிருக்கிறார்.

## பிர்தவ்ஸின் தேவை

பிர்தவ்ஸ் தனது எதிர் வீட்டில் வசிக்கும் வேற்று மதத்து மனிதனான சிவாவை மனதிற்குள் நினைத்துப் புழுங்கினாள். இதுவும் ஒரு பெண்ணின் உரிமையே என்று சல்மா கூறுகிறார். உடல் தேவைக்காக ஓர் இளம் பெண் எல்லா விதக் கட்டுக்குள்ளிருந்தும் வெளியேறுகிறாள். அது அவளது உரிமை. இதை இவ்வுலகம் பெருங்குற்றமாக கருதி, அப்பெண்ணின் தேவையை எண்ணிப் பார்க்காமல் அவளைப் புறந்தள்ளுகிறது. ஆனால் சல்மா பிர்தவ்ஸின் உணர்ச்சியை அவளது உரிமை என்கிறார்.

## இஸ்லாம் வழங்கும் பெண்ணுரிமை

நாம் பெற்றெடுத்த பெண் தானே! நமக்குக் கட்டுப்பட்டு நாம் சொல்லும் ஆணை திருமணம் செய்ய வேண்டியது தானே என நிர்பந்தம் செய்திட எவருக்கும் உரிமை இல்லை. அப்பெண்ணிடம் அனுமதி ஒப்புதல் பெற்ற பின்னே திருமணம் செய்ய வேண்டும் என்கிறது இஸ்லாம்.

## வஹிதா கதை மாந்தர் மூலம் பெண் விடுதலை வேட்கையும், பெண்ணுரிமையும்

காதர் ஹைமாவிற்குப் பிறந்த வஹிதாவை காதரின் சகோதரி சபியாவின் மகன் சிக்கந்தருக்குத் திருமணம் செய்துதர நிச்சயிக்கப்பட்டது. சிக்கந்தர் வெளிநாட்டில் வேலை செய்வதோடு தகாத பழக்கவழக்கங்களை கற்று வைத்திருந்தான். இதனை அறிந்த றைமா வஹிதாவிற்கு வேறு மாப்பிள்ளை பார்க்கலாம் என்று கூறினாள். காதர் அவளிடம்,

"ஆம்பளைன்னா அப்பிடி இப்பிடித்தான் இருப்பான். இதை யெல்லாம் நீ பெரிசு படுத்திட்டு இருந்தா அது சரியில்ல. ஊரு உலகத்துல எவன் உத்தமனானவனா இருக்கான் சொல்லு? அப்பிடி ஒருத்தனத்தான் உன் மகளுக்குக் கட்டி வைக்கணும்னு நினைச்சேன்னா, இந்த ஜென்மத்துல அவளுக்குக் கல்யாணம் நடக்காது அதை ஞாபகத்துல வச்சுக்கோ! ஆம்பள கெட்டுப் போறது பெரிய விஷயமில்லையே, கல்யாணம் ஆயிட்டா இன்ஷா அல்லாஹ் அப்புறம் திருந்திட்டுப் போறான். போ போயி வேலையைப்பாரு." (Salma, 2018)

ஆண் ஆதிக்கத்தை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறான் காதர். காதரின் ஆதிக்கத்தில் அவன் மனைவி றைமாவே சிக்கித் தவிக்கும் பொழுது அவளது மகள் வஹிதாவின் நிலையை விவரிக்க

இயலாது. "ஆம்பள கெட்டுப் போறது பெரிய விஷயமில்லை" என்று கூறுவானா? ஆண்களின் முழு அதிகாரத்திற்கும், அராஜகத்திற்கும் உட்பட்டு தான் வெளிப்படுகிறான். இதிலிருந்து விடுதலை பெறாமல் பெண்கள் தங்கள் சுதந்திரத்தை பெற இயலாது என்றே சல்மா கூறுகிறார். வஹிதாவிற்கும் சிக்கந்தருக்கும் திருமணம் நடந்தது. வஹிதாவை வலுக்கட்டாயமாகவே சிக்கந்தர் அனுபவித்தான். வஹிதாவிற்கு காய்ச்சல் வந்துவிட்டது. சிக்கந்தர் அவளை விட்டுவிட்டு ஊருக்குச் சென்றான். மனைவியை போகப் பொருளாக மட்டுமே பார்க்கும் சிக்கந்தரும், காதரும் ஒரே ஆதிக்கத்தில் தான் இருந்தார்கள்.

## பெண் விடுதலை

பெண் விடுதலை பற்றி சுப்பிரமணிய பாரதியார் பின்வருமாறு கூறுகிறார். "இப்பொழுது பெண்களுக்கு விடுதலை கொடுத்தால் ஏழு லோகமும் கட்டாயம் இடிந்து பூமியின்மேல் விழும் என்றும், வால் நட்சத்திரம் வகையறாக்களெல்லாம் நடுவிலே அகப்பட்டுத்துவையலாய் விடும் என்றும் பலர் நடுங்குகிறார்கள்." (Bharathiar, 2013) என்று பெண்களின் உரிமைகள் பறிபோவதையும் பெண் விடுதலை என்றால் ஆண்கள் அச்சப்படுவதையும் பாரதியார் கூறுகிறார்.

## பெரியாரின் சிந்தனை

வஹிதாவைப் போல், பிர்தவ்ஸைப் போல் ஏராளமான பெண்கள் இந்நாட்டில் வாழ்கிறார்கள். அவர்கள் எல்லாம் தங்கள் விடுதலையைத் தாங்களே தான் முடிவு செய்ய வேண்டும் இதை பெரியார் தீர்க்கமாக உரைத்தார். இதனை இந்து தமிழ்த்திசை 10-11-2019 ஆம் ஆண்டு வெளிவந்த இதழ் தெளிவாக விளங்குகிறது.

"பெண்களின் விடுதலையைப் பெண்களே போராடிப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சொன்ன பெரியாரின் வழிகாட்டுதலைப் பெண்கள் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க முன்வந்தால் அன்றி, பெண்கள் எவ்வளவு பெரிய பதவிகளில் இருந்தாலும் ஆண்களின் பெண்ணடிமைச் சிந்தனை நோய் நீங்கவே நீங்காது."

பெண்களின் உரிமைகளையும், விடுதலையையும் பெண்களே தான் முடிவு செய்ய வேண்டும் என்று பாரதியார், பெரியார், சல்மா ஆகியோர் கூறுகின்றனர்.

## பாத்திமா கதைமாந்தர் மூலம் பெண்விடுதலை வேட்கையும். பெண்ணுரிமையும்

நூரம்மாவின் மகள் பாத்திமா. இவள் வீட்டு வேலை பார்ப்பவள். இவளுக்கு இலியாஸ் என்ற மகன் இருக்கிறான். இவள் முருகன் என்பவனோடு உறவு கொண்டாள். இதை குறித்து ஷெரிபா பாத்திமாவிடம் வினவினாள். அதற்கு பாத்திமா கூறுகிறாள், இந்த ஊர் ஆண்கள் தனக்கு எந்த உதவியும் செய்யாதபோது, தன்னை யாரும் குற்றம் சுமத்த முடியாது என்று வாதிடுகிறாள். ஆண்கள் எந்தப் பெண்ணை வேண்டுமானாலும் அனுபவித்துக் கொள்ளும் போது பெண்கள் மட்டும் என்னவாம்? என்று பாத்திமா கேட்கிறாள். ஆணாதிக்கம் தான் எல்லாவற்றிற்கும் அடிப்படை காரணம் என்று பாத்திமா கூறுகிறாள். இக்கருத்தை உறுதிப்படுத்தும் விதமாக அறிஞர் தன்னுடைய கருத்தை பதிவு செய்கிறார்.

"பெண்களுக்கெதிரான கொடுமைகளுக்கான காரணங்களில் ஆணாதிக்கச் சிந்தனையே முதலிடம் பெறுகிறது என்பதில் ஐயமில்லை. பெண்களை அற்பமாக, இழிவாக, அலட்சியமாகப் பார்க்கின்ற ஆண்களின் மனப்பான்மையே பல கொடுமைகளை இழைக்க சமூகத்தைத் தூண்டுகிறது."

இஸ்லாத்தின் கூற்றுப்படியே வளர்ந்தவர்கள் பாத்திமாவின் நடவடிக்கையை ஏசினார்கள். "ஒரு முஸ்லீமோடு ஓடி இருக்கக் கூடாதா" என்று கேட்டார்கள். பெண்களின் நம்பிக்கையும் அதில் ஊறிப்போன தன்மையும் தான் அவ்வூரில் பெண்களைப் பேசத் தூண்டியுள்ளன. ஆண்கள் இதனைச்

செய்யும் போது யாரும் இதனைக் கேள்வி கேட்க மாட்டார்கள். கரீம் மாரியாயியோடு தொடர்பு வைத்திருப்பதை அவ்வூரில் பெண்களும் இஸ்லாமியப் பெரியவர்களும் கண்டு கொள்ளஇல்லை. கரீமிற்கு எந்த தண்டனையும் வழங்கப்படவில்லை. ஆண்கள் இவ்வூரில் இனி ஒழுக்கமாக இருக்க வேண்டும் என்று யாரும் கூறவில்லை. இஸ்லாத்தின் சட்டங்கள் ஆண்களை கட்டுப்படுத்துவதில்லை. ஏனெனில், குற்றம் செய்பவனும், தீர்ப்பு சொல்பவரும் ஆணாகவே இருப்பதால், எல்லாச் சட்டங்களும் அவர்களுக்கு சாதகமாகவே இருக்கின்றன.

தாங்கள் விரும்பிய ஒரு ஆடவனோடு வாழ எந்த இஸ்லாமியப் பெண்ணிற்கும் உரிமை இல்லாமலேயே போய்விடுகின்றது என்பதையே பாத்திமாவின் நடவடிக்கை உணர்த்துகிறது. சல்மா தனது புதினத்தில் பெண்களின் எல்லா வித அவலங்களையும் கூறி, அதன் நடவடிக்கைகளையும் எடுத்துச்சொல்லி, அதன் விளைவுகளையும் விவரித்து படிப்பவர்களின் மனதில் பெண்களுக்கான உரிமைகளைப் பதியவைக்கிறார்.

மனாமியங்கள் மெஹருன்னிஷா கதைமாந்தர் மூலம் பெண் விடுதலை வேட்கையும், பெண்ணுரிமையும் மெஹருன்னிஷாவின் கணவன் ஹசன். சவுதி அரேபியாவில் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறான். சவுதியிலிருந்து வந்தவன் இரண்டாவதாக ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான். அதோடு தனது மனைவி மெஹருவையும், தாய் சுபைதாவையும் அடக்கு முறையில் வைத்து எந்த உரிமையும் கொடுக்காமல் தனது கட்டுக்குள்ளேயே வாழவேண்டும் என்று நிர்பந்தம் செய்தான்.

ஹசன் தனது மனைவியின் விருப்பம் இல்லாமல் இன்னொரு பெண்ணுடன் வாழ்ந்து வந்தான். ஹசனின் அத்துமீறல் மெஹரை உய்த்தெழ செய்தது. மெஹர் ஹசனைத் துறத்துவிட முடிவு செய்தாள். இந்த ஆண் வர்கத்தை எழுத்தாளர் உ. வாசுகி பின்வருமாறு சாடுகிறார்.

ஆணை மையமாக வைத்தே அனைத்தும் தீர்மானிக்கப்படுகிறது, நிர்ணயிக்கப்படுகிறது. ஆணின் பார்வையிலிருந்தே உலகம் பார்க்கப்படுகிறது. எடை போடப்படுகிறது. சொத்தின் மீதும், வளங்கள் மீதும் மேலாண்மை செலுத்துவது ஆண்கள் தான். எனவே கலாச்சார அமைப்புகள் அவர்களது கட்டுப்பாட்டில்தான். எனவே, அதற்குரிய அதிகாரங்களும் அவனிடத்திலேயே நீடிக்கின்றன. நாம் சொல்லும் பெண்ணியம், இந்த அடிப்படையைக் கேள்வி கேட்கிறது. அதிகாரப் பரவலை வலியுறுத்துகிறது." (Vasuki, 2017)

எல்லா கலாச்சாரக் கோட்பாடுகளும் ஆண்களே நிர்மானிப்பதால், ஹசனுக்கு அடங்கி மெஹருன்னிஷா வாழ வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இதன் அழுத்தம் பண்மடங்கு மிகும் பொழுது அதை உடைத்தெரிய பெண்கள் தயாரானார்கள். இதனையே மெஹரும் செய்தாள்.

## மெஹர் "குலா" கொடுத்தல்

ஹசனின் அடக்கு முறையும், அராஜகமும், கட்டுப்பாடும், அத்துமீறலும் நாளுக்கு நாள் எல்லை மீறும் பொழுது மெஹர் துணிந்து நடவடிக்கை எடுக்க முனைந்தாள். இஸ்லாமிய சட்டத்தை பயன்படுத்தி மெஹர் ஹசனுக்கு குலா கொடுத்தாள். குலா என்றால் விடுவித்துக் கொள்ளல் என்று பொருள்படும். மெஹரின் உரிமையை ஹசனால் அங்கீகரிக்க இயலவில்லை. ஆனால், ஹசன் தனது உரிமையைப் பயன்படுத்தி இரண்டாந்தரமாக இன்னொரு பெண்ணுடன் வாழ்க்கை நடத்தினான்.

மெஹர் குலா கொடுத்ததை அவ்வூர்ப் பெண்களே தவறாகப் பேசினார்கள். அனிபா ஹஜரத்தின் மனைவி சுபையம்மா மெஹரின் நடவடிக்கையை பற்றி பின்வருமாறு கூறுகிறாள்.

"ஆம்பள தப்புதான் செய்வான். பொம்பள பொறுத்துப் போறதுதான சரி. ஊரு ஒலகத்துல இல்லாததயா ஹசன் செஞ்சுட்டு வந்துருக்கான். அதுக்காக ரெண்டு புள்ளைகள கைல வச்சுக்கிட்டு குலா குருக்குறாகளாமே நாற முண்டைக, ஊர கெடுக்கறதுக்கா" (Salma, 2016)

சுபையம்மாவின் ஆதங்கம் மெஹர் மீது தான் விழுந்தது. இரண்டு பிள்ளைகளை வைத்திருக்கும் ஹசன் இன்னொரு பெண்ணை திருமணம் செய்யலாமா? என்று கேட்க துணிவில்லை.

பெண்களின் உரிமைக்கு பெண்களே முட்டுக்கட்டை போட்டதால் தான் இன்னும் பெண்கள் அடிமைகளாக இருக்கிறார்கள் என்பதற்கு சுபையம்மாவே சாட்சி.

காலம் காலமாக மூளையில் ஏற்றி வைத்த பெண்ணடிமைத் தனத்தை உடைத்தெறிய இன்னும் பெரும்பான்மையானப் பெண்களுக்கு அந்த மனப்பான்மையே வரவில்லை என்பது தான் இந்த அவலத்திற்குக் காரணம் என்பதனை சல்மா இக்கதை மாந்தர் மூலம் துல்லியமாக விளக்குகிறார்.

பெண்கள் துணிவதே குற்றம் என்று கருதி தங்களுக்குள்ளாகவே சமாதானமாகி மீண்டும் ஆண்களிடம் அடிமையாய் இருக்கச் சம்மதிக்கிறார்கள். சுபையம்மா "ஆம்பள தப்பு தான் செய்வான், பொம்பள பொறுத்துப் போறது தான் சரி" என்று சொல்வதற்கு அவளே அடிமையாக இருக்க விரும்புகிறாள் என்பதே முடிவாக உள்ளது. ஆண்கள் செய்யும் தவறுகளை பெண்கள் அங்கிகரிக்கும் பொழுது பெண்கள் தங்களின் உரிமையை எவ்வாறு பெறுவது? என்ற கேள்வியை சல்மா வெளிப்படையாக கேட்கிறார்.

## மெஹரின் மறுமணம்

ஹசனின் அடக்கு முறையிலிருந்து வெளிவர மெஹர் அவனுக்கு குலா கொடுத்து அவனை விட்டு விலகினாள். மெஹரின் தாய் ஆசியம்மாவின் வற்புறுத்துதலாலும், பழிவாங்கும் எண்ணத்தாலும் மெஹர் அபிபுல்லாவை இரண்டாவது மணம் செய்தாள். இவ்வாறு மெஹர் கதாபாத்திரம் மூலம் பெண்களின் உரிமையும் விடுதலை வேட்கையும் சல்மா காட்சிபடுத்துகிறார்.

## சாஜிதா கதாபாத்திரம் மூலம் பெண் விடுதலை வேட்கையும், பெண்ணுரிமையும்

ஹசனுக்கும், மெஹருக்கும் பிறந்தவர்கள் சாஜிதா, அஷ்ரப் என்ற இரண்டு பிள்ளைகள். சாஜிதா தனது தாயோடு வாழும் உரிமையை இழந்து தவித்தாள். ஹசனின் நடவடிக்கை தான் எல்லாவற்றிற்கும் காரணம் என்பதை உணர்ந்தாள். ஆண் ஆதிக்கம் செய்கின்ற விளைவுகள் அடுத்த தலைமுறையைப் பாதிக்கும் என்பதே சாஜிதாவின் குரலாக இருந்தது.

சாஜிதா பள்ளிப் படிப்பை முடித்துவிட்டுக் கல்லூரிக்குச் செல்ல ஆசைப்பட்டாள். மருத்துவ படிப்பில் தேறி பட்டம் பெற வேண்டுமென்பதே அவள் விருப்பம். ஹசனின் தங்கை பர்வீனும் சாஜிதாவின் உயர் கல்வியை ஆதரித்தாள். ஆனால் வழக்கம் போல் ஹசன் அதற்கு முட்டுக் கட்டை போட்டான்.

ஹசன் தனது மனைவியை அடங்குமுறை செய்வதோடு விட்டுவைக்காமல் தனது மகளுடைய வாழ்க்கையையும் கெடுக்க நினைத்தான். மருத்துவ படிப்பில் சேர்ந்து படித்தால் ஆண், பெண், நெருக்கத்தால் கேடு வந்துவிடும் என்றே அக்கல்லூரியில் சேரவிடாமல் தடுத்தான். பொட்டச்சிக்கு என்னத்துக்கு படிப்பு? என்று ஹசன் தனது ஆண் ஆதிக்கத்தைக் காட்டினான். பெண்கள் படிக்க ஆரம்பித்துவிட்டால் சிந்திக்க ஆரம்பித்து விடுவார்கள் எதிர்த்து கேள்வி கேட்பார்கள். அதனால் தங்களின் ஆளுமைத் தன்மை அழிந்துவிடும் என்ற அச்சத்தால் தான் ஹசன தனது மகள் சாஜிதாவின் படிப்பிற்கே முட்டுக்கட்டை போட்டான்.

## பெண்கல்வி

தந்தை பெரியார் பெண்கல்வி பற்றி பின்வருமாறு கூறுகிறார். "பெண் கல்வியே கூடாது என்ற காலத்தில்வாழ்ந்த பெரியார் ஈ.வெ.ரா. ஆண் கல்வியைவிடப் பெண் கல்வியே வேண்டும் என்று கூறினார். தனியுரிமை உலகில் பெண்கள் சுதந்திரம் வேண்டும் என்பவர்கள் பெண்களை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும். ஆண் பிள்ளைகளை இலட்சியம் செய்யாமல் தங்கள் பெண்களுக்கே செலவு செய்து படிக்க வைக்க வேண்டும் என்று ஈரோட்டில் 28.02.1936 ஆம் நாள் நடந்த சொற்பொழிவில் கூறினார்." (Chandrasekaran & Saravanan, 2019)

பெண்கல்வியை வலியுறுத்தியே இப்புதினத்தில் சல்மா சாஜிதா கதாபாத்திரம் மூலம் அதன் தேவைகளை வெளிப்படுத்துகிறார். பெண்கள் கல்வி அறிவு பெற்று விளங்கினால். ஆண்கள் விஞ்சும் சுய அறிவைப் பெறுவார்கள் என்றே சல்மா உணர்த்துகிறார்.

## பர்வீன் கதாபாத்திரம் மூலம் பெண்விடுதலை வேட்கையும், பெண்ணுரிமையும்

ஹசனின் தங்கை பர்வீன். இவள் வாழா வெட்டியாக வீட்டில் அடைந்துகிடந்தாள். பர்வீனுக்கு வாய்த்த கணவன் ரஹீம் ஆண்மை இல்லாதவனாக விளங்கினான். இதை பர்வீனால் சகித்துக்கொள்ள இயலவில்லை. கையாலாகாத்தனமாக ஆகிப்போன ரஹிம் தனது இயலாமையைக் கோபமாக்கிப் பர்வீனை கடிந்து கொண்டான். நாளடைவில் ரஹிமால் எதுவும் செய்ய இயலாது என்று தெரிந்து கொண்ட பின்பு பர்வீன் தன் தாய் சுபைதாவை நாடி வந்தாள்.

ஆண்மையில்லாத ரஹிமைப் போன்றவர்கள் மலடி என்று பெண்ணைக் குறை கூறித் தப்பித்துக் கொள்வார்கள். ஆனால் பர்வீனின் நிலை என்ன? அவள் தனது எல்லாவித உரிமைகளையும் இழந்து அவமானப்பட்டு வீட்டில், தன் இளமையைத் துறந்து, பல உடல் துயரங்களைக் களைந்து அவள் முடங்கிக் கிடக்க வேண்டியவளாகிப் போனாள். இக்கருத்தை உறுதிப்படுத்தும் விதமாக நிழல்வண்ணன் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்.

"பெண்கள் விடுதலை இயக்கத்தின் எதிரிகள் ஆண்களல்ல, மாறாக ஆணாதிக்க மனோபாவம் மற்றும் ஆணாதிக்கத்தைப் பலப்படுத்துவதற்கு நிறுவப்பட்டுள்ள சடங்குகள், சாத்திரங்கள். பாரம்பரியங்கள் ஆகியவைதாம்." (Nilalvannan, 2016)

ரஹிமின் இயலாமையால் அவதிப்படும் பர்வீன் வேறு ஒருவனிடம் சுகம் காண இயலுமா? அதனை இவ்வுலகம் ஏற்றுக் கொள்ளுமா-? ரஹிம் எதை வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். அவனுடைய ஆண்மையற்ற தன்மை வெளி உலகிற்குத் தெரியாது பர்வீன் மீது தான் பழி வந்துவிடும், பர்வீன் எல்லாவித அவமானங்களையும் தாங்கிக் கொண்டு எந்த உரிமையும் இல்லாமல், விடுதலையும் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தாள். இக்கட்டுக்குள்ளிருந்து பெண்கள் வெளிவரவில்லை என்றால், தங்கள் இளமைக் காலம் முழுவதையும் மன அழுத்தத்திலேயும் ஏக்கத்திலும், கற்பனையிலும் கழிக்க வேண்டி வரும் என்பதே நிதர்சனமாகும்.

பர்வீன் போன்ற பெண்கள் இதிலிருந்து மீள தங்களின் ஆண்மை தான் பெரிது என்று பேசும் ஆண்களிடமிருந்து விடுபட வேண்டும். இதனை உடைக்கப் பர்வீன் போன்ற பெண்கள் வேண்டும்.

## பர்வீனின் முடிவு

பர்வீன் வீட்டிற்குள்ளேயே தனது தனிமையையும், வறுமையையும் எண்ணிக் கொண்டிருக்காமல் நபிஸாவோடு இணைந்து உள்ளூர் பேங்கில், சுய உதவிக் குழுவின் தலைவர், செயலாளர் என்று அனைவரையும் பார்த்து வங்கி கணக்கை ஆரம்பித்துவிட்டார்கள். சுய உதவிக்குழு மூலம் பர்வீன் புதிய, படித்த மனிதர்களையும், கல்வியின் மேன்மையையும் உணர்ந்தாள். மாவட்ட ஆட்சியரோடு பேசவும், பழகவும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர்களின் ஆலோசனைப்படி பர்வீன் வசிக்கும் கிராமத்திலுள்ள குழந்தைத் திருமணத்தைப் பற்றிய செய்திகளை எல்லாம் அவள் மேலதிகாரிகளுக்கு எடுத்துரைத்தாள். குழந்தைத் திருமணங்கள் நிறுத்தப்பட்டன.

## பர்வீனின் ஏக்கம்

பர்வீன் சுய உதவிக் குழுவில் சேர்ந்து பணியாற்றும் பொழுது அங்குள்ள மேலதிகாரி பி.ஓ.ஓர் இளம் வயதுக்காரர். அவரது நிறமும், குணமும், பதவியும் பர்வீனுக்கு பிடித்தது. முதல் முதலாக தனக்குப் பிடித்த ஓர் ஆண் மகனைப் பார்ப்பதாகவே அவள் உணர்ந்தாள். பர்வீன் போன்ற பெண்கள்

தங்கள் ஆசைகளை எல்லாம் மனதிற்குள்ளாகவே பூட்டிவைத்து வாழ்கிறார்கள். இவர்களின் விடுதலையே பெண்கள் இனத்திற்கான சுதந்திரம் என்று சல்மா கூறுகிறார்.

## முடிவுரை

இரண்டாம் ஜாமங்களின் கதை, மனாமியங்கள் என்ற புதினங்களில் வரும் பெண் கதாபாத்திரங்கள் தங்களது உரிமையையும், விடுதலையையும் இழந்தவர்களாகவே உள்ளனர். இஸ்லாமியச் சட்டம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டாலும் இன்னும் அதனை சாதமாக்கி, இன்றைய ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். என்றே சல்மா உரைக்கின்றார். இயலாமையும், கல்லாமையும், பொருளாதாரப் பின்னடைவும், மூட நம்பிக்கையும், முட்டாள் தனமும் பெண்களை அடிமைகளாக ஆக்கிவிட்டன என்றே கூறலாம். ஆண்டாண்டு காலமாய் ஊறிப்போன பழைய சடங்குகளும் சம்பிரதாயங்களும் பெண்களின் மூளையை மழுக்கி, அவர்களது உரிமைக்குத் தடைபோடுகின்றன என்றே சல்மா கூறுகிறார். இஸ்லாத்தில் இன்று பெண்கள் மீது திணிக்கப்படும் கட்டுப்பாடுகள் முன்பு வழக்கில் இல்லாதவை. இவற்றில் பல வளைகுடா நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை என்று கதைகளின் வழியே கூறுகிறார் சல்மா. இவ்வாறான புதிய ஒடுக்குமுறைகள் பன்னாட்டு ஆதிக்க சக்திகளுக்கு ஏதுவாய் முஸ்லிம் மக்களின் பல தரப்பட்ட குரல்களை ஒடுக்கி ஒரு முகத் தன்மையை உலகிற்கு காட்ட முற்படுகிறது. ஆண்வர்கத்தில் எல்லாவித அடக்கு முறைக்கும் பெண்களே உட்படுகிறார்கள். பெண்களின் உடற்கூறும் அதன் தன்மையும் ஆண்களின் ஆதிக்கத்திற்குச் சாதகமாகவே அமைந்திருக்கின்றன. பெண்கள் கல்வியும், உரிமையும் அடைந்து விட்டால் ஆண்களின் ஆதிக்கம் அழிந்து போகும் என்ற காரணத்தால் தான் ஆண்கள் பெண்களை கட்டுப்படுத்தி வைக்கின்றனர் என்று சல்மா இப்புதினங்களில் கூறுகிறார். பெண்களுக்கான பலவீனங்களும், பாதிப்புகளும் நீங்கி எல்லாவித உரிமையும், விடுதலையும் அடைய வேண்டுமெனில் பெண்களே தான் முடிவு செய்ய வேண்டும். இப்புதினத்தின் கதைமாந்தர்கள் பெரும்பாலும் பெண்களாகவே இருப்பதால் அவர்களுக்கான தேவைகளும், ஆசைகளும், நியாயங்களும் வெளிப்படையாக கூறுகிறார் சல்மா.

## References


Bharathiar, (2013) Mahakavi, V.O.C. Noolagam, Chennai, India

Chandrasekaran, R., Saravanan, P. (2019) Bharathidasan Kavidhaigaili Penniyamum Periyarum, Naam thamizhar pathippagam, Chennai, India.

Nilalvannan, (2016) Kutumpa Amaippu Vamaippu Muraiyum, Penkal Vitutalaiyum, Vitiyal pathippagam, India

Salma, (2016) Manaamiyankal, Kalachuvadu Publication, Nagercoil, India.

Salma, (2018) Irandaam Jaamangalin Kathai, Kalachuvadu Publications, Nagercoil, India

Seaman Ilayaraja, (2006) Munnaivar Periyarin Pen Kalvi Sinthanaigal, Naam Thamizhar Pathippagam, Chennai, India

Vasuki, U. (2017) Penniyam Pesalam Vanga, Bharathi Puthakalayam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License